தினகரன்
27.06.2024

# கள்ளக்குறிச்சி விவகாரத்தை அரசியலாக்க முயற்சிக்க கூடாது

## தேசிய மனித உரிமை ஆணையத்திற்கு கண்டனம்

**மதுரை, ஜூன் 27:** கள்ளக்குறிச்சி விவகாரத்தை அரசியலாக்க முயற்சிக்க கூடாது என தேசிய மனித உரிமை ஆணையத்திற்கு மக்கள் கண்காணிப்பகம் கண்டனம் தெரிவித்துள்ளது.

மக்கள் கண்காணிப்பகத்தின் நிர்வாக இயக்குநர் ஹென்றி திபேன் வெளியிட்டுள்ள அறிக்கை:

கள்ளக்குறிச்சி விவகாரத்தில், இந்திய தேசிய மனித உரிமை ஆணையம் ஒரு வாரத்திற்குள் முழுமையான அறிக்கையினை தாக்கல் செய்யுமாறு தமிழ்நாடு அரசை கேட்டுள்ளது. இவ்விவகாரம் தொடர்பாக முதல்வர் மு.க.ஸ்டாலின், ஓய்வு பெற்ற நீதிபதி கோகுல்தாஸ் தலைமையில் ஒரு நபர் விசாரணைக்குழுவை அமைத்துள்ளார். இந்த நிலையில் தேசிய மனித உரிமை ஆணையம், தேசிய பெண்கள் ஆணையம் ஆகியவை, இவ்விவகாரத்தில் தாமாக முன் வந்து விசாரிக்கும் விதமாக தமிழ்நாடு அரசிடம் அறிக்கை கேட்டுள்ளது என்பது சட்டத்திற்கு முரணானதாகும்.

தேசிய மனித உரிமை ஆணையத்திற்கு தலைவர் இல்லாமல் பொறுப்புத் தலைவர் மட்டுமே உள்ளார். நீதிக்காக இயங்க வேண்டிய தேசிய மனித உரிமை ஆணையமும், தேசிய பெண்கள் ஆணையமும் கள்ளக்குறிச்சி விவகாரத்தை அரசியலாக்க முயற்சிக்கக் கூடாது. தேசிய மனித உரிமை ஆணையம் தாமாக முன் வந்து விசாரிக்கும் இச்செயல்பாட்டிற்கு தமிழ்நாடு அரசின் தலைமைச் செயலாளர் தரப்பில் எதிர்ப்புத் தெரிவிக்க வேண்டும்.

இவ்வாறு கூறியுள்ளார்.